**cLkiy¥ng£ilefuh£Á**

**30.11.2020 « njÂa rhjhuz ¡T£l k‹w ãuš**

| வ. எ ண் | நகர்மன்ற தீர்மான எண் | மன்றப்பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| **1** | 1316 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு காய்ச்சல் பரவி வருவதை தடுக்கும் பணிக்குத் தேவையான கிருமிநாசினிகள் விநியோகம் செய்வதற்கு 10-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டுமுறை விநியோக உத்திரவும் வழங்கப்பட்டு பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மழைக்காலம் என்பதால் இந்நகரில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு காய்ச்சல் பரவுதலை தடுக்கும் பொருட்டு லைசால் 1000 லிட்டர் கிருமிநாசினி கூடுதலாக தேவைப்படுவதாக துப்புரவு ஆய்வாளர் தனது 04-11-2020 ம் தேதிய அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.<br>எனவே துப்புரவு ஆய்வாளரின் அறிக்கையின்படி லைசால் கிருமிநாசினி 10-09-2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கான சம்மதத்தினை வழங்கிடக் கேட்டு இவ்வலுவலக 06-11-2020ம் தேதிய அறிவிப்பின்படி மேற்படி ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் நிறுவனத்தாரை கேட்டுக் கொள்ளப்பட்டதில் மேற்படி நிறுவனத்தாரும் ஏற்கனவே பொருட்கள் வழங்கியுள்ள அதே தொகையில் விநியோகம் செய்வதாக 09-11-2020 ம் தேதிய கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.எனவே மேற்கண்ட பொருளை ஏற்கனவே வழங்கியுள்ள அதே விலை விகிதத்தில் மேற்படி நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கும் அதற்காகும் செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 350/2020/எச்2) | அனுமதிக்கப் பட்டது |
| **2** | 1317 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு காய்ச்சல் பரவி வருவதை தடுக்கும் பணிக்குத் தேவையான கிருமிநாசினிகள் விநியோகம் செய்வதற்கு 10.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டுமுறை விநியோக உத்திரவும் வழங்கப்பட்டு பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மழைக்காலம் என்பதால் இந்நகரில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு காய்ச்சல் பரவுதலை தடுக்கும் பொருட்டு பிளிச்சிங் பவுடர் 3 மெட்ரிக்டன் கிருமிநாசினி கூடுதலாக தேவைப்படுவதாக துப்புரவு ஆய்வாளர் தனது 04.11.2020 ம் தேதிய அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.<br>எனவே துப்புரவு ஆய்வாளரின் அறிக்கையின்படி பிளிச்சிங் பவுடர் 3 மெட்ரிக்டன் கிருமிநாசினி 10.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கான சம்மதத்தினை வழங்கிடக் கேட்டு | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>இவ்வலுவலக 06.11.2020ம் தேதிய அறிவிப்பின்படி மேற்படி ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் நிறுவனத்தாரை கேட்டுக் கொள்ளப்பட்டதில் மேற்படி நிறுவனத்தாரும் ஏற்கனவே பொருட்கள் வழங்கியுள்ள அதே தொகையில் விநியோகம் செய்வதாக 09.11.2020ம் தேதிய கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட பொருளை ஏற்கனவே வழங்கியுள்ள அதே விலை விகிதத்தில் மேற்படி நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கும் அதற்காகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண் 350/2020/எச்2</td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>1318</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் குப்பையில்லா நகராட்சியாக (GARBAGE FREE CITY ) ஒரு நட்சத்திர அங்கீகாரம் பெற (ONE STAR RATING) சான்று பெறும் பொருட்டு பொதுமக்களின் ஆட்சேபனை பெற தினசரி நாளிதழ் விளம்பரம் செய்ய தோராய செலவினமாக ரூ.25000/- ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2754/2014/எச்2)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>1319</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுதல் தடுக்கும் பணிக்குத் தேவையான நிலவேம்பு குடிநீர் பொடி பொதுமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு வழங்க நிலவேம்பு குடிநீர் பொடி விநியோகம் செய்வதற்கு 26-11-20 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்த விகிதம் (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங்<br>திருமலை இல்லம்,<br>9-5-1, பஜார் தெரு,அய்யம்பாளையம்,<br>திண்டுக்கல் - 624204</td><td>7,40,000 +<br>GST Rs.37,000/-</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர்,சூளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி - 622002</td><td>8,20,000<br>GST Rs41,000/-</td></tr>
</table>
மேற்காணும் நிலவேம்பு குடிநீர் பொடி வாங்குவதற்கும் அதற்காகவும் உத்தேச செலவுத் தொகை ரூ.8.00/- இலட்சத்திற்கும் இந்நகர்மன்றம் 29.10.2020ம் தேதிய 1314 வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்றுக்கொள்ளப்பட்டு விநியோக உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 3028/2018/எச்2)</td>
<td>அனுமதி வழங்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>1320</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் முதல் நிலை சேகரிப்பு பணிக்கு தேவையான 50 LITRE மற்றும் 80 LITRE SYNTEX BIN குப்பைத்தொட்டிகள் விநியோகம் செய்வதற்கு 26-11-2020</td>
<td>அனுமதி வழங்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி</td><td>ஒப்பந்த (GST கே ரூப</td></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங்<br>திருமலை இல்லம்,<br>9-5-1, பஜார் தெரு,அய்யம்பாளையம்,<br>திண்டுக்கல் - 624204</td><td>4,95,6</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர்,சூளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி - 622002</td><td>6,19,5</td></tr>
</table>
மேற்காணும் SYNTEX BIN வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5.00/- இலட்சத்திற்கும் இந்நகர்மன்றம் 29.10.2020ம் தேதிய 1315வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதாலும் மேலும் பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் அதனை ஏற்றுக்கொள்ளப்பட்டு விநியோக உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண் 2754/2017/எச்2)</td><td></td></tr>
<tr><td>6</td><td>1321</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர்அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண் 564/2020/அ2 நாள் 28.10.2020ல் இந்நகராட்சியின் மக்கள் சாசனம் (Citizen Portal) தயார் செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்நகராட்சிக்கு தயார் செய்யப்பட்ட மக்கள் சாசனம் (Citizen Portal) மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண் 295/2020/சி1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>7</td><td>1322</td><td>இந்நகராட்சிக்கு உட்பட்ட 8 இடங்களில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கடைகள் 32 எண்ணிக்கையிலானவற்றுக்கு காலியாக உள்ளதை மாதாந்திர வாடகை அதிகமாக இருப்பதாகவும் இக்கடைகளை தொடர்ந்து நடத்துவதற்கு வாய்ப்பு இல்லையெனவும் தெரிவித்து குத்தகைதாரர்களால் நகராட்சிவசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு இக்கடைகள் கடந்த இரண்டு வருடங்களாக பூட்டப்பட்டு உள்ளது. இதனால் நகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.<br>
எனவே, நகராட்சிக்கு வருவாய் ஈட்டுவதற்கும் நகராட்சி காலிக்கடைகளை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு நகராட்சி கடைகளை குத்தகைக்கு எடுத்து நடத்த விரும்புவோர்கள் உடனடியாக நகராட்சி அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு பொது அறிவிப்பு பலகை (டிஜிட்டல் பேனர்கள்) தயார் செய்து அவற்றை பொதுமக்கள் அறியும் படியாக 10 இடங்களில் வைக்கவேண்டியுள்ளது. இதற்கான அறிவிப்பு பலகைகள் தயார் செய்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.13000/-ஐ இந்நகராட்சி</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 10039/2017/அ2) | |
| **8** | 1323 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் நகர்ப்புற மேம்பாட்டிற்காக மாவட்ட அளவிலான ஏழை மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கு மத்திய அரசால் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கும் பொருட்டு "பாரத பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின்" கீழ் இந்நகராட்சி பகுதியில் தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பம் பெற்றும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி பெறத் தேவை இல்லை என அரசைணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் 83 தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள் 11.06.2019 ல் கட்டிட அனுமதி பெறுவதற்கு விலக்கு அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 4693/2020/எப்1) | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |
| **9** | 1324 | உடுமலைப்பேட்டை நகராட்சி திருமூர்த்திநகர் தலைமைக்குடிநீர் பணியிட சுத்திகரிப்பு நிலையத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர் திட்டத்தில் முறையே 5 எண்கள் மற்றும் 7 எண்கள் மெதுமணல் தொட்டிகள் அமைந்துள்ளன. மேற்படி தொட்டிகள் மூலம் தண்ணீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சுத்த நீர் சேகரிப்பு தொட்டிகளில் குளோரினேசன் செய்யப்பட்டு நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மெதுமணல் தொட்டிகளை தினந்தோறும் பணியாளர்களை கொண்டு மணல்களில் படியக்கூடிய தூசுகள், கலங்கல்களை வெளியேற்றி வடிதிறன் குறையாமல் செவ்வனே குடிநீர் விநியோகம் செய்யப்படுவதுடன் குடிநீர் சேகரிப்பு சுத்த நீர் தொட்டிகள், வளாகங்களை அவ்வப்போது சுத்தம் செய்தும், செவ்வனே குளோரினேசன் செய்தும் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால், தனியார் ஒப்பந்தப்பணிகளின் அடிப்படையில் 6 நபர்களை (Mazdoor Grade-I) தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளவும் ஏற்கனவே மேற்படி பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தம் வருகிற ஜனவரி 2021வுடன் முடிவு பெறுவதாலும் வருகிற பிப்ரவரி 2021 முதல் டிசம்பர் 2021 வரை 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.40/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2554/2020/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **10** | 1325 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் 2019-2020-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டப்பணி மற்றும் சாதனைகள் குறித்த விபரப் பட்டியலை தினத்தந்தி நாளிதழின் தொழில் மலரில் 25.10.2020 அன்று பிரசுரம் செய்த வகைக்கு விளம்பர கட்டணத்தொகை ரூ.25200/-ஐ தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2194/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **11** | 1326 | உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு எண் 7-க்குட்பட்ட வெஞ்சமடை சுந்தர் நகர் பகுதியில் பகிர்மானக் குழாய்கள் இல்லாத காரணத்தினால் | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>பொதுமக்கள் குடிநீர் இணைப்புகள் பெற இயலாத நிலை உள்ளது. குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைத்துதரக்கோரி பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கியுள்ளார்கள். எனவே மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கவும் அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2,90,000/-க்கும் ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>ந.கஎண் 2611/2020/இ2</td><td></td></tr>
<tr><td>12</td><td>1327</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் நகர்நல அலுவலர் புதியதாக பொறுப்பேற்றுள்ளதால் அவருக்கு அலுவலகத்தில் அறை ஏற்படுத்த நகராட்சி ஆணையர் அவர்கள் நேரில் அறிவுறுத்தியுள்ளார். அதன்படி மேற்கண்ட பழைய அலுவலகத்தில் நகர்நல அலுவலர் அறையில் உள்ள தடுப்புகளை பிரித்து புதிய அலுவலகத்தில் தரை தளத்தில் உள்ள அறையில் பொருத்த வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.40,000/- ஆகும். மேற்கண்ட பணியின் போது சேதமடையும் பொருட்களுக்கு புதியதாக பொருட்கள் வாங்கி பொருத்த வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம் & கோ உடுமலைப்பேட்டை என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2591/2020/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13</td><td>1328</td><td>மாவட்ட ஆட்சியர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் : 3285/2020/இ6 நாள் : 15.10.2020-ல் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2020-2021-ம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட 2 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதி</th></tr>
<tr><td>1.</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி பழனி ரோடு ஜி.வி.ஜி பள்ளி அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணி</td><td></td></tr>
<tr><td>2.</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி தளி ரோடு நூலகம் அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணி</td><td></td></tr>
</table>
(ந.க.எண் 2170/2020/இ1)</td><td>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்ட து</td></tr>
<tr><td>14</td><td>1329</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி மத்திய பேருந்து நிலையம் திருப்பூர் பேருந்துகள் நிற்கும் இடத்தில் உள்ள மேற்கூரையில் சிமெண்ட் பூச்சுகள் சேதமடைந்து உள்ளது. எனவே மேற்கண்ட சேதங்களை உடனடியாக சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/-க்கு மேற்கண்ட பணியை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2381/2020/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **15** | 1330 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் 2019-2020-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டப்பணி மற்றும் சாதனைகள் குறித்த விபரத்தினை தினகரன் தொழில் மலர் நாளிதழில் 25.10.2020 அன்று வெளியானமைக்கு விளம்பர கட்டணத்தொகை ரூ.15750/-ஐ, Kal Publication (P) Ltd நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2195/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **16** | 1331 | உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு எண் 15-க்குட்பட்ட எக்ஸ்பிரஸ் அவென்யூ பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணியை ரூ.90,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 29.10.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>1. M/s.RSM & Co, Udumalpet : மதிப்பீட்டை விட 0.06% குறை<br>2. M/s.Raj & Co, Udumalpet : மதிப்பீட்டை விட 2.62% அதிக<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s. RSM & Co, Udumalpet** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2202/2020/இ2) | அனுமதி வழங்கப் பட்டது |
| **17** | 1332 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான TRN Garden & Sri Balaji Nagar ஆகிய இடங்கள் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட பகுதிக்கு செல்லும் பிரதான சாலையில் தற்போது மூன்று எண்ணிக்கையிலான மின் வாரிய கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் 3 எண்ணிக்கையிலான மின் கம்பங்கள் மின் வாரியம் மூலம் அமைத்து அதில் 15 வாட்ஸ் LED விளக்குகள் அமைப்பதற்கும், அதற்காக மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2295/2020/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **18** | 1333 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான ராஜேந்திரா சாலை உரக்கிடங்கில் உள்ள உரமாக்கும் மையத்தில் (MCC) உள்ள இயந்திரங்கள் பழுது ஏற்பட்டதால் அவற்றை சரிசெய்ய RMT Engineering, கோவை அவர்கள் மூலம் இயந்திரங்கள் சரி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு பட்டியல் தொகை ரூ.15,232/- நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் 2427/2020/இ1 | அனுமதிக்கப் பட்டது |
| **19** | 1334 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான 7-வது வார்டுக்கு செல்லும் பாதையில் தெருவிளக்கு வசதி செய்து தருமாறு மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் மக்கள் குறை தீர்க்கும் நாளில் மனுவினை வழங்கி மேற்படி இடத்திற்கு தெருவிளக்கு வசதி செய்து தர கோரியுள்ளனர். எனவே மேற்படி பகுதியை ஆய்வு செய்ததில் அப்பகுதியில் ஏற்கெனவே உள்ள 3 எண்ணிக்கை மின் வாரிய கம்பங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து எண்ணிக்கை மின் கம்பங்கள் அமைத்து அதில் 15 வாட்ஸ் LED விளக்குகள் அமைப்பதற்கும், | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்காக மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2527/2020/இ2) | |
| **20** | 1335 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட தளி ரோடு நூலகம் அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணியை ரூ.2,70,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 06.11.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>1. U.கண்ணன், நாமக்கல் : மதிப்பீட்டை விட 0.02% குறை<br>2. R.கணேசன், கரூர் : மதிப்பீட்டை விட 4.21% அதிக<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **U.கண்ணன், நாமக்கல்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 2170/2020/இ1) | அனுமதி வழங்கப் பட்டது |
| **21** | 1336 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பழனி ரோடு ஜி.வி.ஜி பள்ளி அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணியை ரூ.2,70,250/- மதிப்பீட்டில் செய்வதற்கு 06.11.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>1. U.கண்ணன், நாமக்கல் : மதிப்பீட்டை விட 0.02% குறை<br>2. R.கணேசன், கரூர் : மதிப்பீட்டை விட 4.21% அதிக<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **U.கண்ணன், நாமக்கல்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண் 2170/2020/இ1) | அனுமதி வழங்கப் பட்டது |
| **22** | 1337 | உடுமலைப்பேட்டை நகராட்சி சர்தார் வீதியிலுள்ள நான்காவது டிவிசன் அலுவலகத்தின் சுவர்கள் சேதமடைந்து மேலும் மேற்கூரையில் தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட பணிகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/-க்கும் மேற்கண்ட பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2383/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **23** | 1338 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான ருத்ரப்பா நகர் பள்ளியின் சுற்றுச்சுவர் மிகவும் பழுதடைந்து விழும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சுற்றுச்சுவரை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக சுற்றுச்சுவர் கட்ட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/-க்கும் மேற்கண்ட பணியை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2382/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **24** | 1339 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான வக்கீல் நாகராஜன் வீதியில் செயல்பட்டு வரும் தாய் சேய் நல விடுதியில் பாதாள சாக்கடை அமைப்பு | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இல்லாத காரணத்தால் கழிவுநீர் வெளியே கொண்டு செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.32,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம் அன்டு கோ உடுமலைப்பேட்டை என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2208/2020/இ2) | |
| **25** | 1340 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் தற்சமயம் சாலை சீரமைப்பு பணிகள் (TURIP 2019-20) பாதாள சாக்கடை திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள், பூங்கா அபிவிருத்தி பணிகள், பொதுப்பணிகள், கல்வி நிதி பணிகள் போன்ற பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகிறது.<br>இந்நிலையில் மேற்கண்ட அனைத்து திட்டப்பணிகளுக்கும் நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி பெறுவதில் தொடங்கி பணிகளை மேற்கொண்டு பில்பட்டியல் தயார் செய்து அனுப்புவது வரையிலும் உதவிப்பொறியாளரால் மட்டுமே பணிகளை மேற்கொண்டு வருவதால் பணிகளில் சுணக்கம் ஏற்படுவதுடன் உதவிப்பொறியாளருக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது.<br>மேலும் உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு புதியதாக பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு புதியதாக திட்டப்பிரேரனைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள உதவிப்பொறியாளருக்கு இரண்டு தொழில்நுட்ப பணியாளர்களை பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி (SOR 2020-21) நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ரூ.937/- (Technical Assistant Grade - I BE Pass) வீதம் 12 மாதத்திற்கு (360X937) இரண்டு தொழில்நுட்ப பணியாளர்களுக்கு ரூ.7.00/- லட்சத்திற்கு இரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதியும், பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(நக.எண் 2384/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **26** | 1341 | மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி பள்ளிகளை ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்ற வேண்டும் அதனால் பள்ளிகளின் தரம் உயர்ந்து மாணவர்களின் எண்ணிக்கை தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்வடையும் என அறிவித்துள்ளார்கள். மேலும் சதாசிவம் வீதி பள்ளி, நெல்லுக்கடை வீதி பள்ளி, நான்காவது வார்டு பள்ளி, கணக்கம்பாளையம் பள்ளி, UKC நகர் பள்ளி, சிங்கப்பூர் நகர் பள்ளி தலைமை ஆசிரியர்களின் மனுவில் நகராட்சி பள்ளிகளிலுள்ள கரும் பலகைக்கு பதிலாக பச்சை/வெள்ளை செராமிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகை பொருத்துவதால் பிற்காலத்தில் தூசியினால் வரும் ஆஸ்துமா நோயிலிருந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை பாதுகாத்து கொள்ளலாம் என்றும் அதற்கு செராமிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகை மற்றும் பள்ளிகளில் Automatic Bell System பொருத்துவதால் பள்ளியில் நேரம் தவறாமையும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்றும் Automatic Bell System பொருத்தி தர கோரியுள்ளார். எனவே மேற்கண்ட பள்ளிகளில் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,15,000/- ஆகும். மேற்கண்ட பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2662/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **27** | 1342 | மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி | அனுமதிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி பள்ளிகளை ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்ற வேண்டும் அதனால் பள்ளிகளின் தரம் உயர்ந்து மாணவர்களின் எண்ணிக்கை தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்வடையும் என அறிவித்துள்ளார்கள். மேலும் ஏரிப்பாளையம் பள்ளி, சத்திரம் வீதி பள்ளி, தாராபுரம் சாலை பள்ளி, கச்சேரி வீதி பள்ளி, சர்தார் வீதி எக்ஸ்டன்சன் பள்ளி, பழனி பாதை பள்ளி தலைமை ஆசிரியர்களின் மனுவில் நகராட்சி பள்ளிகளிலுள்ள கரும் பலகைக்கு பதிலாக பச்சை/வெள்ளை செராமிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகை பொருத்துவதால் பிற்காலத்தில் தூசியினால் வரும் ஆஸ்துமா நோயிலிருந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை பாதுகாத்து கொள்ளலாம் என்றும் அதற்கு செராமிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகை மற்றும் பள்ளிகளில் Automatic Bell System பொருத்துவதால் பள்ளியில் நேரம் தவறாமையும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்றும் Automatic Bell System பொருத்தி தர கோரியுள்ளார். எனவே மேற்கண்ட பள்ளிகளில் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,65,000/- ஆகும். மேற்கண்ட பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2663/2020/இ1) | பட்டது |
| **28** | 1343 | மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி பள்ளிகளை ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்ற வேண்டும் அதனால் பள்ளிகளின் தரம் உயர்ந்து மாணவர்களின் எண்ணிக்கை தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்வடையும் என அறிவித்துள்ளார்கள். மேலும் ராமசாமி நகர் பள்ளி, பழனி ஆண்டவர் நகர் பள்ளி, ருத்ரப்பா நகர் பள்ளி, பழனி ஆண்டவர் மில்ஸ் பள்ளி, இராஜலட்சுமி நகர் பள்ளி தலைமை ஆசிரியர்களின் மனுவில் நகராட்சி பள்ளிகளிலுள்ள கரும் பலகைக்கு பதிலாக பச்சை/வெள்ளை செராமிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகை பொருத்துவதால் பிற்காலத்தில் தூசியினால் வரும் ஆஸ்துமா நோயிலிருந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை பாதுகாத்து கொள்ளலாம் என்றும் அதற்கு செராமிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகை மற்றும் பள்ளிகளில் Automatic Bell System பொருத்துவதால் பள்ளியில் நேரம் தவறாமையும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்றும் Automatic Bell System பொருத்தி தர கோரியுள்ளார். எனவே மேற்கண்ட பள்ளிகளில் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,80,000/- ஆகும். மேற்கண்ட பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2664/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **29** | 1344 | உடுமலைப்பேட்டை நகராட்சியின் நகர்நல அலுவலர் கோவிட் -19 தடுப்புப் பணிகள் முடிந்து நகராட்சியில் பொறுப்பேற்றுள்ளார். அவருக்கு அலுவலக அறையை தயார் செய்து கழிப்பிடம் அமைக்கவும் மற்றும் உதவிப்பொறியாளர் அறையில் தடுப்பு அமைக்கவும் மதிப்பீடு தயார் செய்யும்படி நகராட்சி பொறியாளர் அவர்கள் நேரில் அறிவுறுத்தியபடி மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட ரூ.1,70,000/-க்கான உத்தேச மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண் 2673/2020/இ1 | |
| **30** | 1345 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொறியர் பிரிவிற்கு சொந்தமான ஈப்பு வாகன எண் TN41V9604 வாகனத்திற்கு 2019-2020-க்கான காப்பீடு வரும் 12.12.2020-ல் முடிவடைகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு 2020-2021 ஆண்டிற்கான காப்பீட்டு தொகை ரூ.11,208/-ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் உடுமலைப்பேட்டை என்ற நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.ந.க.எண் 2529/2020/இ2 | அனுமதிக்கப் பட்டது |
| **31** | 1346 | உடுமலைப்பேட்டை நகராட்சி திருமூர்த்திநகர் தலைமை குடிநீர் பணியிட நீர் உந்து நிலையத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர் திட்டத்தில் முறையே 20 கு.தி மின் உந்துகள் - 2 எண்கள் 50 கு.தி மின் உந்துகள் - 2 எண்கள், 30 KVA & 75 KVA மின்னாக்கிகள் மற்றும் மின்சாதனங்கள் இயக்கத்தில் உள்ளன. மேற்படி சாதனங்களை இயக்கியும் பராமரிப்பு செய்தும் செவ்வனே குடிநீர் விநியோகம் மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் அரசு நிர்ணயித்தபடி மூன்று சிப்ட்டுகளுக்கு (8மணி நேரத்திற்கு ஒருவர்) தேவையான மூன்று மின்கம்பியாளர்/மின்பணியாளர்களை தற்காலிக முறையில் நியமித்து பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் தற்காலிக பணியாளர்களின் ஒப்பந்த காலம் ஜனவரி 2021-ல் முடிவடைவதாலும் மேற்படி நீர் உந்து நிலையத்திற்கு 3 எண்ணிக்கை மின்கம்பியாளர்/மின்பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவும்.<br><br>மேலும் தலைமை குடிநீர் பணியிடத்தில் இயக்கத்தில் இருந்து வரும் 60 கு.தி மின் உந்துகள் - 2 எண்கள் 125 KVA மின்னாக்கி மற்றும் மின்சாதனங்களை இரவு பகல் தொடர்ந்து இயக்குவதற்கு ஒரே ஒரு நிரந்தர மின் பணியாளர் மட்டுமே பணியில் உள்ளதால் மேற்படி மின் மோட்டார்கள் மற்றும் மின் சாதனங்களை இயக்குவதற்கு பகலுக்கு ஒருவர் எனவும், இரவுக்கு ஒருவர் எனவும் இரண்டு சிப்டுகளுக்கு தேவையான மின் பணியாளர்களில், நிரந்தர மின் பணியாளர் ஒருவர் மட்டுமே பணியில் இருப்பதாலும் மேலும் ஒரு மின் பணியாளரை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமித்து கொள்ளவும்.<br>ஆகவே தலைமை நீர் உந்து நிலையத்திற்கு மூன்று எண்ணிக்கை மின் பணியாளர்களும் தலைமை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஒரு மின் பணியாளரும் மொத்தம் நான்கு மின் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தற்காலிமாக நியமித்து கொள்ளவும் அதற்காக வருகிற பிப்ரவரி 2021 முதல் அக்டோபர் 2021 வரை 9 மாத காலத்திற்கு ஆகும் செலவினம் ரூ.9,80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் 2553/2020/இ2 | அனுமதிக்கப் பட்டது |

(x¥g«) தே கிருஷ்ணமூர்த்தி,
M i z ahs®/ j å mY t y®

**M i z ahs®**
**cLk i y¥ng£ i l efuh£Á**